# ‘புத்தக வாசிப்புப் பழக்கம் மக்கள் இயக்கமாக மாற வேண்டும்’



மதுரையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் எழுத்தாளர் ச.சே.ராஜன் எழுதிய ‘மாற்று அரசியலின் பன்முகங்கள்’ எனும் நூலை இந்திய கம்யூ.கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் முன்னாள் முதல்வர் தியான்சந்த் கார்.

**மதுரை.அக்.11:** புத்தகவாசிப்புப் பழக்கம் மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் வலியுறுத்தினார்.

மதுரையில் உள்ள தனியார் உணவு விடுதியில் எழுத்தாளர் சி.சே.ராஜன் எழுதிய ‘மாற்று அரசியலின் பன்முகங்கள்’ எனும் நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மூத்த பத்திரிகையாளர் ப.திருமலை தலைமை வகித்தார். விழாவில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூலினை வெளியிட, அதை தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் முன்னாள் முதல்வர் தியான் சந்த் கார் பெற்றுக் கொண்டார்.

பின்னர், சி.மகேந்திரன் பேசியதாவது: மத்தியில் ஆளும் பாஜக அரசு பெரு நிறுவன முதலாளிகளுக்கான அரசாக உள்ளது. அதுமட்டுமன்றி பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாட்டில் மதவாதத்தை முன்னிறுத்தி அரசியல் செய்கின்றனர். இந்த அரசை அகற்ற 2024-இல் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் அனைத்துக் கட்சியின் ஒருங்கிணைப்பு அவசியம்.

அறிவியல் வளர்ச்சியின் புதிய கண்டுபிடிப்புகளால் இன்றைய இளைஞர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது. மகாகவி பாரதியின் ஆக்க பூர்வமான நற்சிந்தனைக்கு வாசிப்பு பழக்கமும் ஒரு காரணம்.

மக்கள் பிரச்னைகளை பேச கிராமங்கள் தோறும் இளைஞர்கள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். புத்தக வாசிப்பின் மூலம் அந்த அமைப்புகள் தற்போதைய தேவை அறிந்து புதிய சிந்தனையுடன் வலிமை பெற வேண்டும். எனவே, புத்தக வாசிப்பு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில், சுய ஆட்சி இந்தியா கட்சியின் தேசியத் தலைவர் கிறிஸ்டினா சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நூலாசிரியர் சி.சே.ராஜன் ஏற்புரையாற்றினார். முன்னதாக, வழக்குரைஞர் இ.ராபர்ட் சந்திரகுமார் வரவேற்றார். வழக்குரைஞர் சந்தனம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். எழிலரசு இளங்கீரன் நன்றி கூறினார்.